உ

மாருதி துணை.

# 1930-வருஷம் அர்ப்பசி மாதம்
# மழையினால் வந்த
# ரயில்வே பாலம் உடைந்த அபாய,

# வெள்ளச் சிந்து.



தும்பகோணம் பாஞ்துரை பத்துக்கட்டுத்தெரு, பாகவதர்,
ஜெகனாதபிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி

கும்பகோணம் பாணுதுரை பாலகவி
**K. குருஸாமிதாஸ் அவர்களால்,**

இயற்றப்பட்டது.

---

கும்பகோணம் சுதேசி பிரஸில் அச்சிடப்பட்டது.

இதன்விலை) (ரிஜிஸ்ட்டர்) (6 பைசா

உ

மாருதி துணை.

# வெள்ளச் சிந்து.

விநாயகர் வெண்பா.

பொல்லாமழை பொழிந்து பூதலத்தில் நீர் பிரள
சொல்லமுடியாமல் சோர்ந்து ஜனம் மிரள
வெள்ளத்தின்சிந்துஎன்று விவரித்துநான் அருள் என்
உள்ளம்மலர் தொடுத்தேன் உச்சிவிநாயகர் காப்பு.

கையாவிலாது நடுகண்புருவ பூட்டு என்ற மெட்டு

1 ஆயிரத்து துளாயிரமாம் ஆண்டுமுப்பதில் பாரு
அர்ப்பியமாதத்திலே வெள்ளம் வந்த ஜோரு

2 குருஸாமிதாஸனவர் கூறிவரும் பாட்டு
ஒருமாதம் மழையினாலே உலகத்திற்கே சீட்டு

3 கெடுத்ததய்யா மழையும் வந்து ஏழைகுடிகள் பாப்பர்
எடுத்துப்போட வாங்கிநேனே ரெண்டுமாதபேப்பர்

4 மண்ணுபோன வெண்ணரு மத்தியிலே உடைப்பு
எண்ணுதவீடுகளும் எஸ்ய்யாரும் அடைப்பு

5 இரும்புதலைகிருமத்தையே இழுத்ததுபோல்லாச்சு
குருவைநெல்லு பயிர்கள் எல்லாம் அருவையில்லாபோச்சு

# வெள்ளச் சிந்து.

6 தடமில்லாமல் ஜனங்கள் எல்லாம் தவிக்கும்காலம்கண்டு
படவுதனில் அதிகாரிகள் பாதுகார்த்தார் நின்று

7 அவசரமாய் அரத்தவர்கள் அவுலு இடிக்கலாச்சு
ஆவதுவும் அழிவதுவும் அரன்செயலேபேச்சு

8 சர்க்காருவேலைக்குமே சம்பளம் கொண்டாட்டம்
சாகுபடி செய்தவற்கு சோத்துக்கு திண்டாட்டம்

9 அர்ப்பியமாதத்திலே ஆறு வெள்ளம் ஓங்க
சர்வீசுகாருயெல்லாம் செட்டுகளில் தூங்க

10 படபடன்று பிரண்டுதய்யா குடமுருட்டியாறு
சடசடன்று விழுந்ததய்யா ராஜகிரியில் பாரு

11 தஞ்சாவூரு சோளகம்பட்டி லயனில் உடைப்பாக
பஞ்சாய் பரக்குறார்கள் பாசஞ்சர்கள் போக

12 அய்யம்பேட்டை மாயவரம் அந்தமட்டும் ரயிலே
பைய்யவே உடைப்படைத்தால் பஸ்ட்டாபோகும் மெயிலே

13 பட்டீஸ்வரம் கோவிந்தகுடியில் பரிதாபம் பாரு
எட்டிபார்க்க இழுக்கிறதாம் திருமலையான் ஆறு

# வெள்ளச் சிந்து.

14 வலங்கிமானும் ஆலங்குடியும் வந்தவெள்ளம் வேக
கலநெல்லுக்கு வழியில்லாமல் குருவை பயிர் போக

15 கோரையாரு உடைப்பினாலே நீடாமங்கலம் கஷ்டம்
சாரைபோலே பிரண்டதப்பா ஜாஸ்தி நஷ்டம்

16 நன்னிலம் விற்குடிச்கும் லயன் உடைப்பு மோசம்
கண்ணார பார்ப்பதற்கே வீடும் ஆடும் நாசம்

17 ஆயிரம்போர்பழையவைக்கோல்- அடித்துக்கொண்டுபோச்சு
வாயில்லா ஜீவனுக்கு மண் விழுந்து போச்சு

18 கொரடாச்சேரி ரைஸ்மில்லில் கோபுரம்போல் வெள்ளம்
கொரங்குசம்டா அரிசிமூட்டை ஆயிரம்மேல் சேதம்

19 திருச்சியிலே பெருமழையால் வீடுகளும் சேதம்
ஆருகிட்டே இருப்பதினால் ஊருகளில் மோதும்

20 ஓட்டு வீடு மழையினாலே நழுகிவிழுகலாச்சு
நாட்டுபுரத்துவீட்டுக்கெல்லாம் சீட்டுகிழிந்துபோச்சு

21 சீரங்கம் சைடுதன்னில் சிதரி வீடு விழுக
சிரமபட்டு ஆயிரக்கால் மண்டவத்தில் இருக்க

# வெள்ளச் சிந்து.

22 கருவூரு திருச்சிக்குமே நடுவில் வெள்ளம் ஓங்க
துருவாய்போன வண்டியெல்லாம் தூரத்திலே தூங்க

23 மணவாரி ஈரோடு மாயனூரு உடைப்பு
க்ஷணத்துக்குள்ளே தந்திமரம் பாலமெல்லாம் மடிப்பு

24 சத்தியமங்களம் பவாணியாற்றில்-சார்ந்ததேவெள்ளோட்டம்
நத்திஅருகில் வாழ்ந்தவரும் நாலடி ஓட்டம்

25 கடினமானமழையும் வெள்ளம் குண்ணூர்தனிலே நாட
வெடிமருந்து சாலையெல்லாம் ஜலத்திலே பிரண்டோட

26 மேட்டுப்பாளையம் ரோட்டுகளிலே மலையும் இடிந்துவிழுக
ரோட்டில்போன வண்டிக்காரர் வழியில்லாமல் அழுக

27 குன்னூரில் மழையும் பெஷஹும் கூடிவந்த தோஷம்
சொன்னேனே பாலம்ரெண்டு வெள்ளத்தாலே நாசம்

28 மைசூரு அணைக்கட்டுக்கு மேலே வெள்ளம் ஓங்க
சைசுடனே தள்ளிவிட்டார் தாங்காமலே ஏங்க

29 நெல்லூரு ஜில்லாவிலே பெண்ணையாரு ஓட
கல்வீடும் ஆடுமாடும் அடித்துக்கொண்டு நாட

# வெள்ளச் சிந்து.

30 எம் எஸ் எம் பாதையிலே ஏக வெள்ளம் மூட
மும்மரமாய் கல்க்கற்ருவின் லயனில் அடித்து ஓட

31 ஆடு மாடு வீடு மனிதர் ஆருகளிலே போக
பாடுபட்டு கொல்லுரானே பரமசிவம் நோக

32 கண்ணுரபார்ப்பதற்கே கல்லு மனது பதரும்
சொன்னுலே கேழ்ப்பதற்கே செவிகளுமே வெதரும்

33 சர்க்காரு அதிகாரிகள் சரீரகஷ்டப்பட்டார்
காப்பாற்றுவேன் என்றுரைத்து ஆற்றி ஓடம் விட்டார்

34 என்னுலியன்ற மட்டும் எழுதினேனேமெய்யா
பின்னைசடும் உரையுரனே இருந்து கேளுமய்யா

35 நாட்டுகளை நஷ்டம்செய்த வெள்ளச்சிந்து பாட்டு
பாட்டைகேட்டு பைசா ஆறு பாலனிடம் நீட்டு

தங்கம் தில்லாலே என்ற மெட்டு.

1 கள்ளனேபோலவுமே களவாங்க வந்ததய்யா
பொல்லாத பாழும் வெள்ளம் வெள்ளபெருமையே
நில்லாத வந்ததைகேள் சொல்லவருமையே

# வெள்ளச் சிந்து.

18 பாலன் குருஸாமி
சாலபுவிதனிலே
சாற்றிநேனே இந்த மட்டும்
பாட்டுகளில் தங்கம்
வெள்ளபெருமையே
சொல்லவருமையே

பேயாமழைபேஞ்சுகிச்சு பெரியவெள்ளம் வந்துகிச்சு என்ற மெட்டு

நாத்தகொல்லேகத்திரிக்கா
ஊத்தகொல்லேகத்திரிக்கா
உடப்பெடுத்த சத்திரிக்கா
திடம்பெருத்த கத்திரிக்கா
அடிபெருத்த கத்திரிக்கா
தடிக்கிவிட்ட கத்திரிக்கா
வெள்ளத்து கத்திரிக்கா
சொள்ளகொண்ட கத்திரிக்கா
தலையில்லாத கத்திரிக்கா
விலையில்லாத கத்திரிக்கா
உப்புவாங்காத கத்திரிக்கா
பருப்புவாங்காத கத்திரிக்கா
காரமில்லா கத்திரிக்கா
சாரமில்லா கத்திரிக்கா
வம்புக்காரன் கத்திரிக்கா
காம்புபெருத்த கத்திரிக்கா
அரக்குமுன்னே கத்திரிக்கா
மரத்துக்குமே கத்திரிக்கா
பேருபோன கத்திரிக்கா
ஜோருபோன கத்திரிக்கா
இவ்வருஷம் கத்திரிக்கா
பவரில்லாத கத்திரிக்கா
நல்லநல்ல கத்திரிக்கா
நாளைவரும் கத்திரிக்கா

முற்றிற்று

# கும்பகோணம் பாணாதுரை
# பாலகவி K. குருஸாமி தாஸ் அவர்கள்
# இயற்றிய புஸ்தகங்களின்
# விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சிங்கார தங்கச்சிந்து | 0 | 0 | 6 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 0 | 6 |
| ஜப்பான் ஒப்பாரி | 0 | 0 | 6 |
| குருநாதன் மாலை | 0 | 0 | 6 |
| மாரியம்மன் சிந்து | 0 | 0 | 6 |
| கலியுக பெருமாள் சிந்து | 0 | 0 | 6 |
| தங்கந்தில்லாலே | 0 | 0 | 6 |
| மன்மதன் ஒப்பாரி | 0 | 0 | 6 |
| சாரதா சட்டம் | 0 | 0 | 6 |
| ஏரோபிளான் பாட்டு | 0 | 0 | 6 |
| வெள்ளைச்சிந்து | 0 | 0 | 6 |
| மூக்கரந்த பாட்டு | 0 | 0 | 6 |
| பட்டுச்சேலை பாட்டு | 0 | 0 | 3 |
| முருகன் சிந்து | 0 | 0 | 3 |
| திருவண்ணாமலையார் தீபச் சிந்து | 0 | 0 | 3 |

இவைகளை கீழ்க்கண்டவர்களிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு மொத்தமாயும், சில்லரையாயும் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும். தேவையுள்ளவர்கள் நேரிலும், லெட்டர் மூலமாயும் தெரிந்துகொள்ளலாம்.

கும்பகோணம் பாலகவி, K. குருசாமி தாஸ் அவர்களால் இயற்றிய புஸ்தகத்தை அனுமதியில்லாமல் அச்சியில் இடுவோர்கள் இதனால் வரும் நஷ்டத்தை கவர்மெண்ட் சட்டப்படி குற்றத்துக்குள்ளாவார்கள்.

**பாலகவி K. குருஸாமி தாஸ்,**
பாணாதுரைபத்துக்கட்டுத்தெரு
**கும்பகோணம்.**